பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்

Registered as a Newspaper

17 JAN 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

உதயன்

விலை
ரூபா
6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 04 வெள்ளிக்கிழமை (17-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 51

# புலிகள் பேச்சில் அக்கறை காட்டின்
# அரசு அதற்கு எந்த நேரமும் தயார்!

## அமைச்சர் கதிர்காமர் அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 17

சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதில் தாம் அக்கறையுடன் விருப்பம் கொண்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவிப்பார்களாயின், எந்த நேரத்திலும் அது குறித்து முடிவு செய்ய அரசாங்கம் தயாராக உள்ளது. ஆனால் சில நிபந்தனைகளின் கீழேயே பேச்சு நடக்கும்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார். நேற்று முன்தினம் உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைச் சொன்னார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளில் அவர்கள் ஆர்வம் இல்லாதிருப்பது குறித்து என்னால் எதுவும் கூற முடியாது.

அவர்கள் ஓர் அடிப்படைக் கொள்கையுடன் இருந்து வருகிறார்கள் என்றே நான் நினைக்கின்றேன்.

அந்த அடிப்படைக் கொள்கை தனிநாட்டுக் கொள்கையாகும். பிரபாகரனால் வெளியிடப்பட்டதாகச்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## பெருமாள் எங்கே? இந்தியாவில் இல்லை!

சென்னை, ஜன. 17

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இந்தியாவில் இல்லை என மத்திய அரசு நேற்று செயின் கமிசன் முன் தெரிவித்தது.

வரதராஜப்பெருமாள் இந்தியாவில் இல்லை என்றும், மாநில காவல் படையும் மத்திய றிசேர்வ் பொலீஸும் அவருக்குப் பாதுகாப்பு அளிப்பதில்லை என்றும் மத்திய அரசு வழக்கறிஞர் பி. தத்த தெரிவித்தார்.

வரதராஜப்பெருமாள் எங்கிருக்கிறார் என்பது குறித்து அரசுக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார்.

1990 முற்பகுதியில் இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து வெளியேறிய சமயம் வரதராஜப்பெருமாளும் இந்தியா சென்றது தெரிந்ததே. (இ-3)

## வர்த்தகர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜன. 17

கொக்குவில் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் வர்த்தகரான உதயகுமார் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறும் விடுதனலப் புலிகளின் அறிவித்தல் அட்டைகள் அவரது சடலத்துக்கு அருகில் காணப்பட்டன என்றும் தெரிய வந்தது. (அ-3)

## முச்சந்தி முரளி



இப்படி இடைக்கிடை ஒவ்வொன்றை விட்டுக் கொண்டிருந்தால் தான் பாருங்கோ காலத்தையும் கடத்தலாம்..!

## பிரபல தொழிலதிபர் சுடப்பட்டார்

இந்தியாவின் பிரபல தொழிற்சங்கவாதியான டாக்டர் சமன் (64 வயது) நேற்று இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பம்பாயில் உள்ள தமது வீட்டில் இருந்து இவர் காரில் புறப்பட்ட சமயம் ஓட்டோவில் வந்த ஒரு குழுவினர் அக்காரின் முன்பாக ஓட்டோவை நிறுத்தியதாகவும்—

பின்னர் ஓட்டோவில் இருந்து இறங்கிய இருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

## ஏப்ரல் 14 க்கு முன் உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, ஜன. 17

ஏப்ரல் 14 ஆம் திகதிக்கு முன் வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்கள் 1994 ஆம் ஆண்டு இடம் பெற்றன.

ஆகவே இந்த மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 1998 ஆம் ஆண்டு வரை உள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பும் யாழ். வர அனுமதி கோருகிறது

கொழும்பு, ஜன. 17

யாழ்ப்பாணத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணப்பித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

ஈ.பி.டி.பி., புளொட் ஆகியன பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப்பெற்று யாழ்ப்பாணத்தில் அலுவலகங்களை அமைத்து தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன என்றும்—

பாதுகாப்பு அமைச்சின்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## கிட்டு நினைவு தினத்தையொட்டி மினிமுகாம் அழிப்பு எனஅறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கேணல் கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) மற்றும் அவருடன் வங்கக் கடலில் களப்பலியான வேங்கைகளின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி—

யாழ். மாவட்டத்தில், மிருசுவில் பகுதியில் இராணுவ மினி முகாம் ஒன்றைத்தாக்கி அழித்ததாக — விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டது.

இது குறித்து அவர்கள் தெரிவித்திருப்பதாவது:-

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மிருசுவில் பகுதிக்குள் நேற்று அதிகாலை 2-26 மணியளவில் ஊடுருவிய விடுதலைப் புலிகள் இரண்டு காவல் அரண்களையும் ஏழு கொட்டில்களையும் கொண்ட மினி முகாம் ஒன்றைத்தாக்கி அழித்தனர்.

இத்தாக்குதலின் போது ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலின் போது

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான - கப்பல் பயணிகள் குறித்து சிவில் நிர்வாகம் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் அல்லது கப்பல் மூலம் செல்லும் பயணிகள் தொடர்பான புதிய நடைமுறை ஒன்றை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று வெளியிட்டது.

விமானம் மூலமாகவோ அல்லது கப்பல் மூலமாகவோ செல்வதற்காக சிவில் நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பங்களை கையளித்தவர்களில், பயணத்துக்கான அனுமதியைப் பெற்றவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் நடத்திய தாக்குதலில்

## கடற்படையின் ரோந்துப் படகுடன் 3 படையினரைக் காணவில்லை

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 17

பூநகரி, கல்முனையில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையினரின் சிறிய ரோந்துப் படகு ஒன்றும் அதில் இருந்த மூன்று கடற் படையினரும் காணாமல் போய் விட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

படகையும் அதிலிருந்தவர்களையும் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் மேலும் தெரிவிக்கப் பட்டது.

[illegible] செய்தி நிறுவனம் ஒன்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்குப் பெரிய தாக்குதல் பிரிவு!

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜன. 17

யாழ். குடாநாட்டுக்குப் பெரிய தாக்குதல் பிரிவுகளை விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அனுப்பியுள்ளார் எனத் தெரியவருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த தமது படையணிகளின் தாக்குதல்கள் மந்தமாக இருந்ததால் இந்த முடிவை அவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வலிங்கம் ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - உணவு இலாகா)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த வி. ஆறுமுகம் 14 - 01 - 1997 செவ்வாய்க்கிழமையன்று நீர்கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், மல்லிகாதேவி, லங்காதேவி, வசந்தாதேவி (கனடா), இராமச்சந்திரன் (ஆசிரியர்), ரங்கராஜன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரட்டிணம் (தபால் அதிபர்), மகேசன், ஸ்ரீபாலன் (கனடா), கோணேஸ்வரி (ஆசிரியை), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயகாந்தன், ஜெயதர்ஷன், ஜெயாலினி, சுபாகர், சஜிதா, சுபாங்கி, கேதுஷா, சகானா, தட்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15 - 01 - 1997 புதன்கிழமையன்று நீர்கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மகேசன் லங்காதேவி
(மகள்)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(44716)

## சீவரெட்ணம் உதயகுமார்
### (கலட்டி கண்ணன்)

யாழ்ப்பாணம், இராமநாதன் வீதியைச் சேர்ந்த சீவரெட்ணம் உதயகுமார் (வர்த்தகர்) நேற்று மாலை அகால மரணமானார்.

அன்னார் சீவரெட்ணம் — மகேஸ்வரி தம்பதிகளின் மகனும், செல்வராணி (செல்வி) யின் அன்புக் கணவரும், நிரோஜன், நிவேதிகா (பொஸ்கோ மாணவர்கள்), விதுசன், யதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சாந்தகுமாரி, உதயகுமாரி, சுகுமாரன் ஆகியோரின் சகோதரரும், சிவானந்தன், திருமதி சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (18-1-97) சனிக்கிழமை நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ஸ்ரீஸ்கந்தராஜா
(மைத்துனர்)

'குற்றாலம்'
77/58, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(45727)

## ஆபத்துக் கால அலவன்ஸ் இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். பல்கலைக்கழக ஊழியர் மற்றும் விரிவுரையாளர், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான ஆபத்துக் கால அலவன்ஸ் இன்னமும் வழங்கப்படவில்லை. (இ-15)

## 2 கப்பல்களில் இருந்து பொருள்கள்

வடமராட்சி, ஜன. 17

மாஹோ, சஜிந்தா ஆகிய இரு கப்பல்களில் இருந்தும் நேற்றைய தினம் பருத்தித்துறைத் துறைமுகத்தில் பொருள்கள் இறக்கப்பட்டன.

இன்று முதல் மாஹோ கப்பல் காங்கேசன்துறையில் தார் பீப்பாக்களை இறக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. நேற்றைய தினம் மாஹோ கப்பலிலிருந்து குளிர்பானப் போத்தல்கள் இறக்கப்பட்டன.

காங்கேசனில் இன்று முதல் தார் பீப்பாக்களை இறக்கிய பின்னர் மாஹோ கப்பல் எதிர்வரும் திங்கள் முதல் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து எஞ்சிய பொருள்களை இறக்க ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதுவரையும் பருத்தித்துறை துறைமுகத்தில் சஜிந்தா கப்பல் பொருள்களை இறக்கும்.

(இ-173)

## திட்டமிட்டபடி உண்ணாவிரதம்

கொழும்பு, ஜன. 17

''தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் மகஸின் சிறைச்சாலையில் இம்மாதம் 20 ஆம் திகதி திட்டமிட்டபடி ஆரம்பமாகும்.''

தமது சட்டத்தரணிகள் ஊடாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தமிழ் அரசியல் கைதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். (இ-5)

# நினைவலைகள்

31 ஆம் நாள்



அமரர்
அம்பலவாணர்
அற்புதரட்ணம்
(மாஸ்ரரும், ஓய்வுபெற்ற யாழ். போதனா வைத்தியசாலைப் பாதுகாவலரும்)

மலர்வு: 13-09-1906
உதிர்வு: 15-12-1996

6 ஆம் ஆண்டு



திருமதி
அற்புதரட்ணம்
எமிலி பூரணம்

மலர்வு: 11-01-1911
உதிர்வு: 24-11-1990

கண்களில் உங்கள் கோலம், காதினில் உங்கள் ஓசை ஐயா!
எண்ணிட வேகுதே நெஞ்சம் எங்களின் தெய்வமே உங்களை அம்மா!
எப்படி மறக்கலாம்? எதைச் சொல்லி ஆறலாம்?
இறைவனே இதுவும் விதிதானா...?

அமரர் அற்புதரட்ணம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வின் போது அன்னாரின் மனைவியான திருமதி அ. எமிலிபூரணம் அவர்களையும் நீங்காத நினைவுடன் நினைவு கூர்ந்து இவர்களிருவரதும் ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி,
உடுவில், சுன்னாகம்.

(சி/3945)

# மரண அறிவித்தல்கள்

## காசிநாதர் செல்லப்பா

(நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி)

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தபாலதிபர் காசிநாதர் செல்லப்பா 15 - 01 - 97 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பராசக்தியின் (கனகமுத்து) அன்புக் கணவரும், டாக்டர் விவேகானந்தன் (நியூசிலாந்து), விமலாதேவி (நியூசிலாந்து), விக்னேஸ்வரி (சந்திரா) (ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர்), சுவர்ணதேவி (அமெரிக்கா), சாவித்திரி (ஆசிரியை, மகளிர் மகா வித்தியாலயம், சாவகச்சேரி), விஜயலக்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவானி, மகாதேவன், சிவபாலசிங்கம், வாமதேவன், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், தர்மராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், வாசுகி, ராதா, உமா, முரளிதரன், காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் பகீரதன், சிவகாமி, கிரிதரன், மீரா, பரதன், சுமதி, மாலா, வத்சலா, அகிலா, பாஸ்கரன், ரமா, வித்தியா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அர்ஜுன், சாமினி, ரேணுகா, கைலாஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரது தகனக் கிரியைகள் 17 - 1 - 97 இன்று (வெள்ளிக்கிழமை) பி. ப. 3.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சந்திரா (மகள்)

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(44714)

## திருமதி கனகம்மா சின்னையா

யாழ்ப்பாணம் கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், இல. 85, கொழும்புத்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சின்னையா அவர்கள் 31-12-96 அன்று ஸ்காபறோ, கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதர் சின்னையா அவர்களின் அருமை மனைவியும், சிவநேசன் (கனடா, முன்னாள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர்), சிவபாலாம்பிகை, சிவபாலன் (கனடா), சிவஞானம் (கனடா), சிவானந்தன் (கனடா), சிவகாந்தரூபி (லண்டன்), சிவகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம், (தபாலகம், கொள்ளுப்பிட்டி), மீனலோஜினி (கனடா), உசிதமலர் (கனடா), ஜெகவாணி (கனடா), லீலா (கனடா), இராமகிருஷ்ணன் (லண்டன்), பத்மகாந்த் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், எழிலினி ஜெயபாலன், சிவரூபன், லாவண்யா, சஞ்ஜீவன், சுதாகர், ராதிகா, ராஜு, கவிதா, அகிலா, மிதிலா, சாகித்யா, லஷ்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 04-01-97 அன்று (S. Sivanesan, 50, BlackwellAvenue, Unit 45, Scarborough, Ontario, MIB 1K2, Canada) நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ஆ. சுந்தரலிங்கம்
(மருமகன்)
36/1, மூர் வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தபாலகம்,
கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.
(44722)

## யோசவ் இம்மானுவேல் வேலாயுதபிள்ளை

யோசவ் இம்மானுவேல் வேலாயுதபிள்ளை 16-01-97 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற விக்டோரியா ஜெயமணியின் அன்புக் கணவரும், திருமதி நிர்மலர்க்கரசி முத்துக்குமாரு, ஜெகநாதன் (லண்டன்), பத்மநாதன் (லண்டன்), ஆசீர்நாதன் (லண்டன்), யோகநாதன் (கனடா), திருமதி சறோஜினிதேவி ரெட்ணகுமார், கமலநாதன் (கனடா) திருமதி சுபோதினி சுரேஸ் (கனடா), விஜயநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற முத்துக்குமாரு, சிறிகாந்தா (லண்டன்), புளோறன்ஸ் (லண்டன்), லின்டா (லண்டன்), மாலினி (கனடா), ரெட்ணகுமார் மீரா (கனடா), சுரேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஷ்குமார் (பரி. யோவான் கல்லூரி), பியோனா, டீன் (லண்டன்), றோகான், கிருஷாந்தி, நிஷாந்தி (லண்டன்), ஷோண், றெபேக்கா (லண்டன்), டறன், டிலான், ஷெரீன் (கனடா), தர்ஷனகுமார், றஜீவ்குமார் (பரி.யோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி கனகம்மா அரசரெட்டினத்தின் அன்புச் சகோதரனும், திருமதி பொன்றோஸ் வடிவேற்கரசுவின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (17-01-97) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
அ.ரெட்ணகுமார்.
(மருமகன்)

இல 15. பாண்டியன்தாழ்வு,
சந்தானமாதாகோயில் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(44718)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# எம்நாட்டில் 2படைகள் உள்ளதால் போர் மூலம் சமாதானம் ஏற்படாது

## ஆரியரத்தினா கூறுகிறார்

கொழும்பு ஜன. 17

''எமது நாட்டில் இரண்டு படைகள் இயங்குகின்றன. ஆகவே போரினால் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.''

சர்வோதயத் தலைவர் ஏ.ரி. ஆரியரத்தின மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அரசின் 1996ஆம் ஆண்டுக்கான காந்தி சமாதானப் பரிசை பெற்றமைக்காக அவரைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவம் கொழும்பில் நடந்த போது அதில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானம் வேண்டும் என்பது பேச்சில் மட்டும் இராது ஒவ்வொருவரின் இதயத்திலும் வரவேண்டும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் என்ற பேதம் பாராமல் எல்லோரும் சகோதரர்கள் என்ற எண்ணத்துடன் வாழ வேண்டும்.

அன்பினால் மட்டுமே சமாதானத்தைக் கொண்டு வர முடியும்.

மகாசங்கத்தினர் தீர்வுத் திட்டத்தினை நடைமுறைப் படுத்த வேண்டாம் எனக் குரல் எழுப்புகின்றனர்.

சமாதானத்தை எதிர்ப்பவர்களினது வீட்டில் உள்ள உறுப்பினர் ஒருவரின் இறந்த உடல் வரும்போது தான் அவர்களுக்கும் சமாதானத்தின் அவசியம் புரிகிறது.

மதவேறுபாடுகளை விட்டு எல்லோரும் கைகோர்ப்பதன் மூலம் புதிய சமுதாயத்தை புதிய உலகத்தை உருவாக்குவோம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

சபாநாயகர் கே. பி. ரத்நாயக்க பேசுகையில், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என பாகுபாடு காட்டாது எல்லோரும் ஒரே நாட்டில் பிறந்த சகோதரர்கள் என்ற மனப்பாங்குடன் சகலரும் செயற்பட வேண்டும் — என்றார். (இ-3)

## இலங்கை மாணவருக்கு தமிழக முதல்வர் நிதி உதவி

சென்னையிலிருந்து சென்று கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூரில் கல்வி பயிலும் 230 தமிழ் மாணவர்களின் கஷ்டங்களைப்போக்குவதற்காக, தமிழக முதலமைச்சர் நிதிஉதவி வழங்கியுள்ளார்.

இலங்கை மாணவர்கள் நிதிக்கஷ்டம் காரணமாக பட்டினி கிடக்கும் ஆபத்து தோன்றியுள்ளதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து—

முதலமைச்சர் கருணாநிதி நிவாரண நிதியிலிருந்து 5லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இலங்கைத் தமிழ் மாணவர்கள் இப்போது 'பிறைற்' என்ற சமூக சேவை அமைப்பின் பராமரிப்பிலேயே உள்ளனர். (அ-4)

## குரேயை கைது செய்ய 'இன்ரபோல்' உதவி?

ஐ. தே. கவின் முன்னாள் முக்கிய பிரமுகரான சிறிசேன குரேயை தேடிப் பிடிப்பதற்கு சர்வதேச பொலீஸாரின் (இன்ரபோலின்) உதவியை இரகசியப் பொலீஸார் நாடியுள்ளனர்.

மூன்று மாதத்துக்கு முன்னர் இவர் குடும்பத்துடன் அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

லலித் அத்துலத்முதலி படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கு அழைப்பு விடுத்தும் சமுகமளிக்காத காரணத்தால் இவரைக் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டிருப்பது தெரிந்ததே.

அமெரிக்காவில் தங்கியிருப்பதாகக் கூறப்படும் இவரைக் கைது செய்ய சர்வதேச வாரண்டை அனுப்புவதற்கு இரகசியப் பொலீஸர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-150-3)

## சிவசிதம்பரம் ஜனாதிபதியை சந்திப்பார்

கொழும்பு, ஜன. 17

வடக்கில் இருந்து வவுனியா வந்து அங்கு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள அகதிகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த இருக்கின்றார்.

## பிரசார இயக்கம்

யுத்தத்தின் பாதிப்பை விளக்கும் வகையில், சமாதான பிரசார இயக்கம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை நண்பகல் கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெறவிருக்கிறது. அந்நிகழ்வில் பங்கு பற்றும் மக்கள் கறுப்புப்பட்டி அணிந்து கலந்து கொள்வர்.

''யுத்தம்'' என்ற தலைப்பில் குருநாகல் பகுதியினர் அளிக்கும் தெரு நாடகமும் இடம்பெறும்.

சமூகத்தில் ஏற்படும் யுத்தப் பாதிப்புக்கள், சமாதானப் பணிகளை மீளக் கட்டிஎழுப்பல் ஆகிய விடயங்கள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தவே இந்த இயக்கம் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கையின் பிரச்சினைகளை இலங்கையே தீர்க்கவேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 17

''இலங்கையின் பிரச்சினைகளை தீர்க்கும் தேவை உலகத்துக்கு இல்லை. இலங்கையின் பிரச்சினைகளை இலங்கையே தீர்க்க வேண்டும்.''

ஐ. தே. க. தலைவர் ரணில் விங்கிரமசிங்க ஐ. தே. க வின் இளைஞர் முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்கும் வழி, தடைகள் ஆகியவற்றை நான் சுட்டிக் காட்டுகிறேன். அது மட்டுமன்றி அதனூடாக செயற்பட்டு சவால்களை வெற்றி கொள்வதற்கான செயற்பாடுகளையும் நான் மேற்கொள்வேன்.

அணுகுண்டினால் அழிந்த ஜப்பான், போரினால் அழிந்த ஜேர்மன் போன்ற நாடுகள் மீண்டும் எழுந்தன என்றால் போரினால் சீரழிந்த இலங்கையை கட்டியெழுப்புவதை ஒரு சவாலாகக் கருதி செயற்படுவோம்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## மேலும் 2 பஸ்கள்

யாழ்ப்பாணம், ஜன. 17

வடபிராந்திய போக்குவரத்து சேவைகளுக்கு என மேலும் இரண்டு பஸ்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-15)

## கல்வி நிறுவக பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜன. 17

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்புளோமா பகுதி 1, பகுதி 2 பரீட்சைகள் அடுத்த மாதம் முதலாம், இரண்டாம், எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் நடைபெற விருப்பதாக வலயம் ஒன்றின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# பௌத்த நாடான இந்தோனேஷியா இன்று முஸ்லிம் நாடாக மாறிவிட்டது

## அந்த நிலை இலங்கைக்கும் ஏற்படலாம் என்கிறார் அஸ்கிரிய பீடாதிபதி

கொழும்பு, ஜன. 17

முன்பு ஒரு காலத்தில் இந்தோனேஷியா 100 சத வீதம் பௌத்த மக்களைக் கொண்டிருந்தது. இன்று முஸ்லிம் நாடாக அது மாறிவிட்டது. அதே நிலை இலங்கையிலும் ஏற்படாமல் இருக்க சிங்கள பௌத்தர்கள் தற்பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்க வேண்டிய காலம் வந்துள்ளது.

அஸ்கிரிய பீடாதிபதி ஸ்ரீ பலிப்பான சந்தானந்த தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டி அஸ்கிரிய சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தில் பௌத்த மதகுருமார் கலந்து கொண்ட மாநாடு ஒன்று அண்மையில் நடந்தது.

மாநாட்டுக்கு முன்னர் ஏராளமான பிக்குகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்ட ஊர்வலம் ஒன்று கண்டி தலதா மாளிகைக்கு அருகில் இருந்து மாநாட்டு மண்டபம் வரை இடம் பெற்றது.

நாற்பதுக்கு மேற்பட்ட சிங்கள அமைப்புக்கள் இணைந்து நடத்திய இந்த மாநாட்டுக்கு தலைமை வகித்த அஸ்கிரிய பீடாதிபதி மேலும் கூறியதாவது;-

### சிறுபான்மையினரே ஆளுகின்றனர்

சிங்கள பௌத்த மக்களின் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது. அவர்கள் மத்தியில் ஒற்றுமையில்லாத காரணத்தால் சிறுபான்மையினரே இன்று இந்த நாட்டை ஆட்சி செய்கின்றனர்.

சிறுபான்மையினரின் ஆதரவுடன் ஆட்சி செய்ய வேண்டிய நிலை இருப்பதால் அரசாங்கம் அவர்களின் பேச்சையே கேட்க வேண்டியுள்ளது.

இந்த மாநாடு அரசை மாற்றவோ அல்லது புதிய அரசை ஏற்படுத்தவோ கூட்டப்பட்டது அல்ல சிங்கள மக்கள் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே பௌத்த சாசனமும், பௌத்தமும் இந்நாட்டில் வாழும்.

ஆகவே இவற்றுக்கெதிராக யார் செயற்பட்டாலும் அவர்களுக்கு சரியான வழிவகைகளை எடுத்துக் கூறுவது நமது கடமையாகும்.

நாம் சொல்வதைக் கேட்காத பட்சத்தில் எமது மாற்று நடவடிக்கையைப் பற்றி பின்பு அறிவிப்போம்.

### அஷ்ரப்பும் தொண்டாவும்

இந்நாட்டில் அம்பாறை, புத்தளம் போன்ற சிங்களப் பிரதேசங்களில் அமைச்சர் அஷ்ரப் முஸ்லிம்களைக் குடியேற்றுகிறார். அமைச்சர் தொண்டமானோ மலையகத்தின் பல பகுதிகளில் தமிழர்களைக் குடியேற்றுகிறார். இதனால் எமது நாட்டின் சிங்களப் பிரதேசங்கள் பறிபோகின்றன.

கடந்த சில வருடங்களாக சிங்கள மக்களுக்கும், பௌத்த சாசனத்துக்கும் பேராபத்து ஏற்பட்டு வருகிறது. இதனால் மகாசங்கத்தினர் அடிக்கடி இதுபற்றி கூடிப் பேசி தேசிய சங்க அமைப்பு ஒன்றினை உருவாக்கியுள்ளோம். நாடெங்கும் இதன் கிளைகள் நிறுவப்படும்—

இப்படி அவர் கூறினார்.

மடிகே பஞ்ஞாசீக தேரர் உரையாற்றுகையில் ''கடந்த காலத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் கொண்டுவர முயன்ற பிராந்திய ஆட்சி முறையை இந்த அரசாங்கமும் கொண்டுவர முயல்கிறது. இதனால் ஒரு நாடு ஒன்பது துண்டுகளாக மாறும். மூன்றில் இரண்டு கடற்பகுதியும் மூன்றில் ஒரு தரைப்பகுதியும் பறிபோகும்'' —என்றார்.

ஞாபான பிரமஸ்ரீ தேரர் உரையாற்றுகையில், 'பொது மக்கள் ஐக்கியமின்மையும், ஐ. தே. கவும் ஒன்று சேர்ந்தால், இனப்பிரச்சினைக்கான தீர்வை இரண்டே வாரங்களில் கொண்டு வரலாம்'' என்றார்.

மாதுளுவே சோபித தேரர் பேசுகையில், ''ஐ. நா அறிக்கையின் பிரகாரம் உலகில் அழிந்து வரும் இரு இனங்களான எஸ்கிமோவர்கள், செவ்விந்தியருடன் சிங்கள இனமும் மூன்றாவதாக உள்ளது'' என்றார்.

'ஜாதிக சிஹல உறுமய'? — 'ஜ ப கிரான' அமைப்பின் உப தலைவர் எச். பி. ஜயசிங்க பேசுகையில் கூறியதாவது:

பௌத்த மதத்தையும், சிங்கள இனத்தையும் அழித்தொழிப்பதற்காக பலவகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகில் அழிந்து வரும் மூன்று இனங்களில் சிங்கள இனமும் ஒன்று என்று ஐ. நா. அறிக்கை தெரிவிக்கின்றது.

எனவே சிங்கள இனத்தையும், பௌத்தமதத்தையும் காப்பதற்காக காவல் தெய்வங்களான மதகுருமார்களின் நிழலாக நாம் பணியாற்றி வருகிறோம். புத்தர் தோன்றிய இந்தியாவிலேயே புத்த மதம் வணக்கத்தலத்துடன் நின்றுவிட்டது.

மாலைதீவும் ஒரு காலத்தில் பௌத்த நாடாகத்தான் இருந்தது. ஆனால் இன்று அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் கூட ஒரு புத்தரின் படம் இல்லை.

### அரசியல்வாதிகளை நம்பக்கூடாது

இன்று நம்நாட்டில் சிங்கள பௌத்தவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகளை நம்பக்கூடாது. பௌத்தத்தையும் பௌத்த சிங்களமக்களையும் காக்க வேண்டியது பௌத்த சிங்கள மக்களின் கடமையாகும்.

ஒரு காலத்தில் இலங்கை முழுமையாக பௌத்த நாடாக இருந்தது. ஆனால் இன்று பௌத்தர்கள் 70 சத விகிதத்தினர்களாக குறைந்துவிட்டனர்.

பெரும்பான்மை மக்கள் தங்களுடைய உரிமைகளுக்காக குரல் எழுப்பினால் அது இனவாதமென்று கணிக்கப்படுகிறது.

அதேவேளை சிறுபான்மையினர் உரிமைக்காக குரல் எழுப்பினால் அது உரிமைக் குரல் எனக் கூறப்படுகிறது.

அரசின் தீர்வுத் திட்டத்தை ஆதரிப்போரை அரசு பக்கம் சார்ந்தவர்கள் எனக் கணிக்கிறார்கள்.

அதேவேளை ஜனநாயக ரீதியில் எதிர்ப்பைத் தெரிவித்தால் அவர்கள் எதிரிகளாகக் கருதப்படுகிறார்கள்.

இப்படி அவர் கூறினார். (இ-3-150)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**திகதி: 26-01-97 ஞாயிறு காலை 10 மணி**
(புதிய நேரம்)

**இடம்: 374, பருத்தித்துறை வீதி, நல்லூர்.**
(கல்வியங்காடு சந்தை அருகாமை)

புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறும். சகல ஆயுட்கால உறுப்பினர்களையும் பங்குபற்றும்படி கோருகிறோம்.

நாட்டு நிலைமை சீரடையாத காரணத்தாலும், இடம்பெயர்வாலும் தனித்தனி அழைப்புக்கள் அனுப்ப முடியாமலிருப்பதால் சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும், ஆயுட்கால உறுப்பினர்களையும் இப்பொதுக் கூட்டத்தில் பங்குபற்றும்படி கோருகிறோம்.

கு. கயிலாயபதி, பதில் தலைவர். லயன். வ. பரமசிவம், செயலாளர்.

(44712)



# பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

## கல்வியாண்டு 1997/98

## G. A. Q., G. S. Q.

க. பொ. த. உயர்தரத்தில் **180** புள்ளிகளைப் பெற்றவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், **1996** ஓகஸ்ட் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர் பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள்: 18 - 01 - 1997 இல் ஆரம்பமாகின்றன.**

விவரங்களுக்கு: **உதவிப் பதிவாளர், பட்டப்படிப்புகள் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 20 வருடங்களாக இயங்கிவரும் ஒரேயொரு நிறுவனம் யாழ். நகரில் இதுவே.

(44721)



# சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ – உ)

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிட்ட வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் **1997** தை மாதம் **31** ஆம் ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**1. வழங்கல்கள்:**

அலுவலக தளபாடங்கள், காகிதாதிகள், கட்டட வேலைக்குத் தேவையான பொருள்கள், வாகனத்திற்குத் தேவையான உதிரிப்பாகங்கள்.

**2. சேவைகள்:**

கட்டட ஒப்பந்த வேலைகள், திருத்த வேலைகள், மின்சார இணைப்பு வேலைகள், தளபாடத் திருத்த வேலைகள், வாகனத்திருத்த வேலைகள், மின்தறியாலைத் திருத்த வேலைகள்.

யாழ்ப்பாணம்/ பருத்தித்துறை/ காங்கேசன்துறை ஆகிய இடங்களில் இருந்து சங்கானைக்கு லொறிகள் மூலம் பொருள் ஏற்றி வருதல்.

சங்கானை களஞ்சியத்தில் இருந்து கிளைகளுக்கு லொறி/ இரண்டு சில்லு உழவ இயந்திரம்/ உழவு இயந்திரம் ஆகியன மூலம் பொருள் ஏற்றுதல்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்கல்/ சேவைகள் 1997'' என குறிப்பிட்டு விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் ''பொதுமுகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம்'' என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஒவ்வொன்றிற்கும் பதிவுக் சட்டணமாக ரூபா **100**/- செலுத்தி தனித்தனி விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்

மேலதிக விவரங்கள் சங்க அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்,**
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

9-1-1997. (இ-3942)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள் கல்வியாண்டு 1994/95

கீழே தரப்பட்ட பரீட்சைகள் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிற்பகுதியில் நடைபெறவுள்ளன.

முதற் கலைத்தேர்வு — **1995**

முதல் வர்த்தகத்தேர்வு— **1995**

1. விண்ணப்பப் படிவத்தினைப் பெறவிரும்புவோர், யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூ. 15/- ஐச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 22-01-1997 இல் இருந்து வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ். பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூ. 12/50 பெறுமதியான முத்திரையொட்டப்பட்ட 28 20 செ. மீ. அளவுடைய தபால் உறையையும் அனுப்புதல் வேண்டும்.
3. இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிடமிருந்து **28 - 02 - 1997** ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**குறிப்பு:**

மாணவர்கள் தமது பதிவேட்டினை அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

**பதிவாளர்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(சி/3941)



# மெய்யியற் கல்வி அகம்

## G. A. Q. / B. A

மாணவர்களுக்கு சனி, ஞாயிறு தவிர்ந்த கிழமை நாள்களில் **மெய்யியல், உளவியல் விரிவுரைகள்** ஆரம்பமாகி விட்டன.

## 98, 99, A/L

அளவையியல் வகுப்புகள் நடைபெறுகின்றன.

46/2, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.

(44724)


# வாக்காளர் அட்டவணையா; அதை யாரிடம் பெறுவது?

தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் திருத்தியமைக்கப்படுவது தொடர்பாக திரு. குமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியிருப்பதாக உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

அந்த விடயம் அர்த்தமுள்ளதும் அவசியம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றும் என்பதைப் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் பாதிக்கப்பட இருப்பவர்களும் உணர்வார்கள்.

எம்மண்ணில் பல்வேறுபட்ட தவிர்க்கமுடியாத காரணங்களால் வாழ்விடங்கள் மாற்றப்படும் அவலம் தொடர்கிறது. வாக்களிக்கும் உரிமை கூட, அதனை ஒழுங்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் அருகிப் போனதால், தமிழர்கள் தாம் ''வாக்காளர்கள்'' என்ற ஞாபகம் கூட அற்றுப்போய் விட்டது.

ஆனாலும் யாழ். மாவட்டச் செயலக தேர்தல் அலுவலகம் வருடாந்தரமாக வாக்காளர் பட்டியலைத் தயாரித்துப் பதிவு செய்துள்ளது. இது 1986 — 87 ஆம் ஆண்டு அடிப்படையில் பிரதியிடப்பட்டதே அன்றி ஒவ்வொரு ஆண்டின் மாற்றங்களையும், திருத்தங்களையும் உள்ளடக்கிய நடுப்பகுதி (ஜூன் மாத) கணக்கீடல்ல என்பதனைத் தயாரித்த அதிகாரிகளே ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

இதற்காக இதனோடு தொடர்புடைய அதிகாரிகளைக் குறை கூறவோ, குற்றஞ் சுமத்தவோ நான் முற்படவில்லை. காலத்தின் கோலம் அது.

ஆனால் அண்மையில் நிகழ்ந்து முடிந்த, மேலும் நடக்க இருப்பதாகக் கூறப்படும் ஆசிரிய நியமனத்திற்கான (போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு) நேர்முகப்பரீட்சைக்கு தாம் விண்ணப்பித்த பிரதேசச் செயலர் பிரிவை உறுதிப்படுத்த, பின்வரும் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

(1) 1993, 94, 95ஆம் ஆண்டுகளது அவர்கள் அல்லது குடும்ப உறுப்பினரை உள்ளடக்கிய வாக்காளர் அட்டவணை.

(2) பிரதேசச் செயலரால் பிரதியொப்பமிடப்பட்ட கிராம சேவகர் சான்றிதழ்.

பிரதேசச் செயலர் பிரிவு அடிப்படையில் புள்ளிகளும், நியமனமும் அமைவதால் இவ்வேற்பாடு. இவை சமர்ப்பிக்கப்படாவிடின் பதவி கிடைக்க முடியாத நிலை.

யாழ். மாவட்டத்தில் 1987க்கு முன் குறித்த ஒரு பிரதேசச் செயலரின் பிரிவில் வசித்து அதன் பின் பிறிதொரு பிரதேசச் செயலர் பிரிவுக்கு இடம் மாறி நிரந்தரமாகத் தொடர்ந்து வசிப்போர் கிராம சேவையாளரது வதிவிடச் சான்றிதழைப் பெறலாம். ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குரிய வாக்காளர் அட்டவணையை எவ்வாறு பெற முடியும்?

## வாசகர் திருமுகம்

எத்தனையோ இன்னல்களுக்கும் இழப்புக்களுக்கும் மத்தியில் பரீட்சையில் சித்தியடைந்தும் ஒரு சிலர் பதவி பெறமுடியாது போவது எத்துணை பரிதாபம்!

பாதிக்கப்படுபவர்கள் ஒரு சிலர்தான் என்றாலும் அவர்களுக்கு நீதி வழங்க முடியாதா? செய்யாத தவறுக்காக இத்தகைய தண்டனையை வழங்கலாமா? வாக்காளர் பட்டியலே திருத்தப்படாத நிலையில் இதனைக் கோர அனுமதி எவ்வாறு அளிக்கப்பட்டது? தமிழ்ப் பகுதிக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்புக்களோ மிகக்குறைவு. இப்படியும் தட்டிப் பறித்தால் எங்குபோய் முறையிடுவது? யாரை நீதி கேட்பது?

மனித நேயமும் உதவும் மனப்பாங்கும் எமது உயர் அதிகாரிகளுக்கு இருப்பின் அவர்கள் இதற்கு உதவலாம். நிச்சயம் உதவும் கடப்பாடுடைய மக்கள் பிரதிநிதிகளும் ஏனைய அக்கறை உள்ள அனைத்துத் தரப்பாரும் பாதிக்கப்படுபவர்களுக்கு நீதிவழி நின்று நியாயம் பெற்றுத் தரலாம். இவர்கள் கைகொடுப்பார்கள், குறைபோக்குவார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

**எஸ். எம். லிங்கம்.**

யாழ்ப்பாணம்.

# பருத்தித்துறை - கொடிகாமம் பஸ் சேவை மீண்டும் வேண்டும்

கொடிகாமம் தென்மராட்சிப் பகுதியின் கேந்திர ஊர் மட்டுமன்று, குடாநாட்டின் முக்கிய நிலையமுமாகும். அதனால் கொடிகாமத்தை ''சின்ன யாழ்ப்பாணம்'' என்றும் அழைத்தனர்.

ரயில் சேவை இருந்த காலத்தில், கொடிகாமத்திலிருந்து அரை மணித்தியாலத்துக்கு ஓர் இ. போ. ச. பஸ் சேவையும், கால் மணித்தியாலத்துக்கு ஒரு தனியார் பஸ் சேவையும் நடைபெற்றதை மிகப் பலரும் அறிவர். குறிப்பாக பருத்தித்துறை – கொடிகாமம் பஸ் மற்றும் மினி பஸ் சேவை வெகு ஒழுங்காகவும் சீராகவும் நடைபெற்றன.

ஆனால் இப்போது கொடிகாமத்தின் கேந்திர நிலை உணரப் படாமலே பஸ், தனியார் பஸ் சேவைகள் நடத்தப் படுகின்றன.

அதனால் —

வடமராட்சியில் இருந்து பளைவரை சென்று கடமையாற்றும் அரச ஊழியர்களும், பொதுமக்களும் பருத்தித்துறை – கொடிகாமம் பஸ் சேவை நடைபெறாதபடியால், துவிச்சக்கரவண்டியில் பத்து மைல்களுக்கு மேல் கொடிகாமம் வரை சென்று, பின்னர் யாழ் - பளை இ.போ.ச. பஸ் மூலம் சென்று கடமையாற்றி வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய இக்கட்டான நிலையில், நெடுந்தூர துவிச்சக்கரவண்டிப் பிரயாணம் தொல்லை மிகுந்ததும் ஆபத்து நிறைந்ததுமாகிவிட்டது. எனவே மேற்படி கடைசி போக்குவரத்து சேவையில் ஆகக் குறைந்தது இ. போ. ச. பஸ் வண்டி ஒன்றையாவது ஈடுபடுத்தலாம். இதன் மூலம் வடமராட்சியில் இருந்து தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி வரை சென்று கடமை புரியும் அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் நன்மை பெறுவர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி விடயத்தில் கவனமெடுத்து உதவிட வேண்டுகின்றேன்.

**பி. யோகநாதன்.**

கன்பொல்லை வீதி,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இந்திய ஆகாய பிராந்தியத்தினுள் ஊடுருவிய பாக். உளவு விமானம்

## இந்தியா பதில் தாக்குதல்

புதுடில்லி, ஜன. 17

இந்தியாவின் ஆகாயப் பிராந்தியத்துக்குள் ஊடுருவிய பாகிஸ்தான் இராணுவ உளவு விமானம் ஒன்றின்மீது இந்தியா பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.

விமான ஓட்டி இல்லாமலேயே இயங்கும் அந்த பாகிஸ்தான் இராணுவ விமானம், இந்தியாவின் மேற்கு எல்லையை ஊடுருவியதாகவும் இதனை அவதானித்த இந்தியாவின் 'புஜ்' விமானத்தள ராடர்கள் எச்சரிக்கை செய்யவே பாகிஸ்தான் விமானம் நோக்கிப் பதில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆனால், விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதா, இல்லையா என்பது குறித்து இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கருத்து வெளியிடவில்லை.

அதேசமயம், இந்த சம்பவம் ஆதாரம் எதுவுமில்லாதது என பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்துள்ளது.

(இ-5)

## பூமியின் வெப்பம் குறையும்

வத்திக்கான், ஜன. 17

அடுத்த 10 ஆண்டுகளில் பூமி மீது மின்னியக்கக் கதிர்களின் தாக்கங்கள் குறைவாக இருக்குமெனவும்- பூமியின் வெப்பநிலை குறையும் எனவும் கனடாவின் விண்வெளி, மற்றும் பிற ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(இ-5)

## தென்கொரியா வேலை நிறுத்தம் தொடர்கிறது

சோல், ஜன. 17

தென்கொரியாவில் தற்போது நடைபெற்று வரும் நாடு தழுவிய தொழிலாளர் வேலை நிறுத்தம், இராணுவத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான யுத்தம் போன்று உருவெடுத்து வருகிறது.

தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டால் கடும் எதிர் விளைவுகளைத் தென்கொரியா சந்திக்கும் என பிரசெல்ஸ் நகரைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச தொழிற்சங்கங்களின் சம்மேளனம் எச்சரித்துள்ளது.

(இ-5)

# உலக அரங்கில்

# பணயக்கைதிகள் பிரச்சினை சுமுகமாகத் தீரும் அறிகுறி

லீமா, ஜன. 17

பெருவில் ஒருமாதமாக நீடிக்கும் பணயக்கைதிகள் நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைநகர் லீமாவில் ஜப்பானியத் தூதரின் இல்லத்தில் 74 பேரைப் பணயக் கைதிகளாக வைத்துள்ள போராளிகள் பேச்சுவார்த்தை நடத்த ஒரு குழுவை அமைக்க ஒப்புக் கொண்டுள்ளனர்.

நாட்டை விட்டுப் பாதுகாப்பாக வெளியேற முதன் முறையாக விருப்பம் தெரிவித்துள்ள போராளிகள் சிறையில் உள்ள தங்களது 400 சகாக்களையும் பெரு அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி உள்ளனர்.

(இ-5)

# புகை பிடிப்பது அழகுக்கும் ஆபத்து

## பிரிட்டிஷ் ஆய்வாளர் கண்டுபிடிப்பு

லண்டன், ஜன. 17

புகை பிடித்தல் உடல் நலத்துக்கு ஆபத்தானது என்றுதான் இது வரை விளம்பரம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் புகைபிடித்தல் உடல் அழகுக்கும் கேடு விளைவிக்கும் என இங்கிலாந்தில் புதிய விளம்பர வாசகம் பிறந்துள்ளது.

காரணம் புகை பிடிப்பவர்களின் சருமம்- குறிப்பாக முகத்திலுள்ள சருமம்- விரைவில் சுருக்கு விழுந்து விடுகிறது என்றும், தொடர்ந்து புகை பிடிக்கிறவர்களுக்கு வயோதிபத் தோற்றம் விரைவில் வந்து சேர்ந்து விடுகிறது என்றும் இங்கிலாந்து மருத்துவ ஆய்வு நிரூபிக்கிறது.

(இ-4)

# பிரியங்கா பற்றித் தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தியவர்!

## ஒரு மன நோயாளியாம்

புதுடில்லி, ஜன. 17

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா காந்தி திருமணம் செய்வதற்கு எதிராக இந்திய நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

26 வயதான பிரியங்கா அடுத்த மாதம் 5 ஆம் திகதி திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ள நேரத்தில், காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினரும், சட்டத்தரணியுமான வி. ஆர். கிருஷ்ணா கௌட் என்பவர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

'பிரியங்கா காந்தியை நான் ஏற்கனவே திருமணம் செய்துவிட்டேன். அவர் எனது மனைவி. என்னுடைய மனைவி இரண்டாவது மணம் புரியப் போகிறார் எனப் பத்திரிகையில் பார்த்தேன். அதனைத் தடுப்பதற்காகவே நீதிமன்றம் வந்துள்ளேன்'' என்று அவர் தமது மனுவில் கூறியுள்ளார்.

பிரபல வர்த்தகரான ரொபேர்ட் வடேஹ்ராவுக்கும், பிரியங்க காந்திக்கும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

41 வயதான கிருஷ்ணா கௌட் பிரபல நடிகைகள் ஸ்ரீதேவி, ஜெயபிரதா ஆகியோரைத் தாம் திருமணம் செய்ததாக ஏற்கனவே பரபரப்பை ஏற்படுத்தினார் என்று சொல்லப்படுகிறது.

1982 ஆம் ஆண்டு ஒரு பெண் மருத்துவரை பலாத்காரம் செய்த குற்றத்துக்காக இவர் 5 மாதச் சிறைத்தண்டனை பெற்றிருக்கிறார்.

(இ-3-5)

# ஹெப்ரோன் ஒப்பந்தத்துக்கு இஸ்ரேல் அங்கீகாரம்

## எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சர் ஒருவர் பதவி துறப்பு

ரெல் அவிவ் ஜன. 17

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஹெப்ரோன் ஒப்பந்தத்தை இஸ்ரேல் அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

பன்னிரண்டு மணி நேர கடுமையான விவாதத்துக்குப் பின்னர் பதினொன்றுக்கு ஏழு என்ற வாக்கு எண்ணிக்கையில் இஸ்ரேலிய அமைச்சரவை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது.

ஏற்கனவே ஒப்பந்தத்தை எதிர்த்து இஸ்ரேல் விஞ்ஞானத்துறை அமைச்சர் பெனிஸ் பெகின் இராஜினாமாச் செய்துள்ளார். முன்னாள் பிரதமர் பெகினின் புதல்வர் இவர்.

அதே சமயம் பலஸ்தீன அதிபர் அரபாத்தின் 22 அமைச்சர்களில் இருவர் ஹெப்ரோன் ஒப்பந்தத்திற்கு எதிராக வாக்களித்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-10)

# காபூலில் திருடனுக்கு மரண தண்டனை!

காபூல், ஜன. 17

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் ஒரு கிலோ சர்க்கரை திருடிய ஒருவர் தலிபான் இயக்கத்தினரால் வீதியால் இழுத்துச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்திருடனின் முகத்தில் கரிபூசி, கழுத்தில் கள்ளிச் செடி மாலை சூட்டி, பொது வீதி வழியே அவனைஅடித்து, உதைத்து தலிபான் இயக்கத்தினர் இழுத்துச் சென்றனராம்.

பிறருக்கு இது சரியான எச்சரிக்கையாக இருக்கும் என தலிபான் செய்தித் துறைப் பொறுப்பாளர் முல்லாஅமீர்கான முர்தாக்கி தெரிவித்துள்ளார்.

(இ-5)

# கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தங்க நாணயம்

கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தங்க நாணயங்கள் தயாரிக்கப்பட்டதற்கான சான்றுகள் அனுராதபுரம் அபயகிரி விஹாரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்க நாணயங்கள் தயாரிக்கும் 8 அச்சுக்கள், தங்க மாலைகள், தங்கத்திலான 8 புத்தர் சிலைகள் ஆகியன அகழ்வாராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்டுள்ளன என ''தினமின'' நாளிதழ் தெரிவிக்கிறது.

# இலங்கை மீனவர்களுக்கு இந்தியா. எச்சரிக்கை

இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசிக்கும் இலங்கை மீனவர்களை இந்திய கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் கண்டு பிடித்தால் கடும் தண்டனை வழங்கப்படும் என்று இந்திய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அத்துடன் அவர்களின் மீன்பிடி உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படும் என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

மீன்பிடிக்கச் சென்ற சமயம் இலங்கை மீனவர்கள் பலர் இந்திய காவல்படையால் கைது செய்யப்பட்டு, பெங்களூர், தூத்துக்குடி, மதுரை, அந்தமான், நிக்கோபர் கொச்சின் போன்ற இடங்களில் உள்ள சிறைகளில் கடந்த 9 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்டவர்களில் 53 பேர் இது வரை விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் —

மேலும் 24 பேர் விரைவில் விடுதலையாவர் என்றும் இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(இ-3)

# விவேகானந்தர் நூற்றாண்டு கட்டுரைப்போட்டி

சுவாமி விவேகானந்தரது யாழ்ப்பாண வருகையின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு திருநெல்வேலி இராமகிருஸ்ணாலயத்தினருடன் இணைந்து யாழ். மாநகர சபை சைவசமய விவகாரக் குழு நாளை நடத்தும் கட்டுரைப் போட்டிக்கான அனுமதிப்பத்திரங்கள் தபாலில் அந்த அந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

வட. இந்து மகளிர், கொக்குவில் இந்து, நல்லூர் மங்கையர்க்கரசி ம. வி, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வி. ஆகிய பாடசாலைகளில் இப் போட்டி நடைபெறும்.

## நூல் வெளியீடு

யாழ். திருமறைக்கலாமன்றத்தின் 'தவச்சுடர்கள்' நூல் வெளியீட்டு விழா நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 30 மணிக்கு நடைபெறும்.

இந்த வெளியீட்டு நிகழ்வைத் தொடர்ந்து ''ஏரோதன்'' என்னும் நாடகமும் [illegible]

(இ-51)

# விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை 4, 856 பேர் இணைவு

சண்டிலிப்பாய் ஜன. 17

விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இதுவரை 4 ஆயிரத்து 856 விவசாயிகள் சேர்ந்துள்ளார்கள். 71 விவசாயிகள் மாதாந்தம் தங்கள் ஓய்வூதியத்தை பெற்று வருகின்றனர்.

இத்தகவலை யாழ். கமத்தொழில் காப்புறுதி சேவை உதவிப் பணிப்பாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் இணைந்து ஓய்வூதியம் பெறும் விவசாயிகளுக்கான ஒப்பந்தச் சான்றிதழ்கள் தற்போது நல்லூரிலுள்ள மாவட்ட அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருவதாகவும் —

இதுவரை அதனைப் பெறாதவர்கள் அங்கு தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

இதே வேளை இத்திட்டத்தில் சேர்ந்து மரணமடைந்தவர்களுக்கான மரண பணிக்கொடை இது வரை மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது வரை விண்ணப்பித்து காசோலையை பெறாதவர்கள் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

(இ-135)

# உருளைக் கிழங்குப் பயிருக்கான கிருமி நாசனிக்குத் தட்டுப்பாடு

அச்சுவேலி ஜன. 17

யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்குச் செய்கைக்கு பயன்படுத்தும் கிருமி நாசனிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

கிருமி நாசனிகள் மற்றும் பங்கஸ் நாசனிகளை உரிய காலத்தில் உருளைக்கிழங்குப் பயிர்களுக்கு தெளிக்காவிடில் விளைச்சல் பெருமளவில் பாதிக்கும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(இ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்புறமாகவும், சிவன் கோயிலுக்கு அருகாமையிலும், பிரதான வீதியில் அமைந்துள்ள மூன்று கடைகளைக் கொண்ட கட்டடத் தொகுதி விற்பனைக்குண்டு. சேர்த்தோ அல்லது தனித்தனியாகவோ பெற்றுக் கொள்ளலாம். ப. இந்திராணி, இரும்பு மதவடி, வதிரி. தொடர்பு: த. நந்தகுமார், கிராமசேவையாளர், பருத்தித்துறை. (சி-3992)

### தவறிவிட்டது

இரத்தினவேலு ராஜ்குமார் ஆகிய எனது இல. 741732530 V அடையாள அட்டையும், சிறு தொகைப் பணமும் ஆனைக்கோட்டைக்கும், நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் 9 - 1 - 97 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பிறேம் நகைமாடம், 4 ஆம் சட்டை, கூழாவடி, ஆனைக் கோட்டை. (44710)

### திருமண சேவை

சகல வகையினரான மணமக்களுக்கும் பொதுவான சேவை. பெற்றோர் நேரில் வந்து பதிவது, விரைவான திருமணங்களுக்கு வழியாகின்றது. ''சேவை நம்பகம்'' விவாக சேவை, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (44705)

### வீடு வாடகைக்கு

யாழ். நகரில் அடிப்படை வசதிகளுடன் (விரைவில் மின்சாரமும்) வீடு வாடகைக்கு உண்டு. சிறுதொகை முற்பணம் அவசியம். தொடர்பு: ஞா. தவமலர், 03, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (44706)

### ஆங்கிலம்/சிங்களம்

அடிப்படை ஆங்கிலம் மாதாந்த பரீட்சைகள் உட்பட க. பொ. த. சா/த '97, ஆங்கிலம் பகல் 11. 00 மணி வகுப்புகள் உடன் ஆரம்பமாகின்றன. சிங்களம் பகல் 10· 00 மணி. T.சகாதேவன், இல. 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை. (44694)

## தேவை

நுண்கலை நிலையம் ஒன்றுக்கு
**எழுதுனர் தேவை.**
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
**18**ஆம் திகதி (சனி) 10மணிக்கு நேரில் வரவும்.

**தூரிகை**
**சட்டநாதர் வீதி, நல்லூர்.**
(44711)

## SPOKEN ENGLISH

**By: BRITTO**
**புதிய பிரிவு ஆரம்பம்:**
**18-01-97** (1 மணி)

**புதிய உயர் கல்லூரி**
**ஆரியகுளம் சந்தி - யாழ்.**
(44691)

## நிர்மாணத் திணைக்களத்தில் ஒப்பந்தகாரர்களை பதிவு செய்தலுக்கான அறிவித்தல்

நிர்மாணத் திணைக்களத்தில் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ள விரும்பும் ஒப்பந்தகாரர்கள் எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து **07 - 02 - 1997** -க்கு முன்பாக பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**எந்திரி. ந. சுந்தரமூர்த்தி**
**பிரதம பொறியியலாளர்,**
**நிர்மாணத் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.**

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். 17-01-97

(சி-3934)

## 19 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 12 — 09 — 1921



விண்ணில்: 17 — 01 — 1978

### அமரர் ஆ. க. ஆறுமுகம்தம்பி

(ரயில் நிலைய அத்தியட்சகர், C. G. R, மருதானை)

**திதி - 17 - 01 - 97**

அன்புடன் நினைவு கூரும்:
**மனைவி கமலா, பெறாமக்கள்,**
**சகோதர சகோதரிகள், மைத்துனர்,**
**மைத்துனிகள், மருமக்கள்.**

274, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(44683)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 21 — 05 — 1944



மறைவு: 19 — 12 — 1996

### திருமதி இராசம்மா சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் சுப்பிரமணியத்தின் மனைவி)

19 - 12 - 96 அன்று உலக வாழ்வை நீத்த எமது அன்பு மனைவியின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றி நவிலும் நாம், நாளை (18-01-97) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும், பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்;
**கணவன், பிள்ளைகள்,**
**சகோதரன், உற்றார், உறவினர்.**

ஊரிக்காடு,
கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

(44668)

## திருமறைக் கலாமன்றம்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச அடிகளாரின்

### 50 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

**"தவச்சுடர்கள்"** நூல் வெளியீடு
**"ஏரோதன்"** நாடகம்

காலம்:- **18 - 01 - 97** சனிக்கிழமை.
நேரம் :- மாலை 4. 30 மணி
இடம் :- **மன்ற அரங்கு.**

பிரவேசம் இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்.**
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3938)

## உயர் கலைக் கல்லூரி

### A/L 97, மீட்டல் 98, 99

**கணித, உயிரியல் வகுப்புகள்**

| | | |
|---|---|---|
| இரசாயனம் | — | திரு. மணியம் |
| பௌதிகம் | — | திரு. குமரன் |
| தாவரவியல் | — | திரு. சிறிதரன் |
| விலங்கியல் | — | திரு. அல்போன்ஸ் |
| தூய, பிரயோக கணிதம் | — | திரு. குணம் |

**ஆரம்பம்:- 19 - 01 - 1997**

விவரங்களுக்கு:
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

(44723)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் பிரதம சிறாப்பராக கடமையாற்றும்
**திரு. த. சிவபாலன்**
**அவர்களின் அன்புத் தாயார்**

### திருமதி தம்பிஐயா ஆசைப்பிள்ளை

அவர்களின் மரணத்தால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**சிறாப்பர் பகுதி**
**மாநகராட்சி மன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(44713)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

''போவோம் காலம் வந்தது காண்
பொய்விட்டு உடையான் கழல் புகவே''

தோற்றம்: 21 — 03 — 1934



மறைவு: 18 — 12 — 1996

### திருமதி இராசையா இராசம்மா

''மண்ணிற் பிறந்திட்ட மாதரசி இராசம்மா
பெண்ணிற் பெருந்தக்களாய் வாழ்ந்தாள் - விண்ணிற்
பறந்திட்ட போதும் பாசத்தின் இவள் நினைவு
இறந்துவிட மாட்டா தென்றும்.''

இறுதிச் சடங்கில் பங்கு கொண்ட இதயங்களுக்கு நன்றி கூறுகின்றோம். (17 - 01 - 97) இன்று நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல்: **இ. தெய்வபுலேந்திரா (T.O.)**
முருகன் கோயிலடி,
நெல்லியடி, கரவெட்டி.

(சி/ 3939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்கள் சந்திரிகா, ரணிலை சந்திப்பர்

## இணக்கம் ஏற்படுத்த இறுதி நேர முயற்சி

கொழும்பு, ஜன. 17

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் தமிழ் — முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவை எதிர்வரும் 20 ஆம் திகதியும் —

ஜனாதிபதி சந்திரிகாவை எதிர்வரும் 22 ஆம் திகதியும் சந்திக்க உள்ளனர்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனை சம்பந்தமாகப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துவதே இந்தச் சந்திப்பின் நோக்கம் ஆகும்.

இ. தொ. கா. தலைவரும் கால்நடை அபிவிருத்தி கிராமிய தொழில்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் —

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் —

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கப்பல்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் —

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.) யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா —

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) யின் தலைவர் த. சித்தார்த்தன் — ஆகியோரே சமரச முயற்சியில் ஈடுபடவுள்ள கட்சித் தலைவர்கள் ஆவர்.

இதற்கிடையில் தெரிவுக் குழுக் கூட்டம் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப் பட்டுள்ளது.

பல்வேறு அரசியல் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்கவே இக்கூட்டம் ஒத்திப் போடப்பட்டதாகவும் —

அரசியல் கட்சிகள் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற விடயத்தைத் தற்போது ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### அதிகாரப்பரவலாக்கல் திட்டம்:

## இணக்கம் ஏற்படுத்த முயலும் தமிழ் கல்விமான்கள் குழு

கொழும்பு, ஜன. 17

அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை சர்வஜன வாக்கெடுப்புக்கு விடாது அரசியல் கட்சிகளிடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்த தமிழ் சட்டத்தரணிகள், கல்விமான்கள் மற்றும் புத்தி ஜீவிகள் கொண்ட குழு முயற்சி மேற்கொண்டுள்ளது.

இந்தக் குழு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளது.

இது விடயமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அது தோற்கும் பட்சத்தில், இனக்குரோதம் தலையெடுக்கும் என்றும் —

அதன் மூலம் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும் — இக்குழு ரணிலிடம் தெரிவித்தது. (இ-3)

## அதிபர் கூட்டம்

வலிகாமம்தெற்கு, ஜன. 17

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும். (இ-152)

## கூடுதலான மாணவருக்கு புலமைப்பரிசில்

கொழும்பு, ஜன. 17

இந்த ஆண்டு 5820 மகாபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் —

பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு 4,988 புலமைப்பரிசில்களும் ஏனைய உயர்கல்வி மாணவர்களுக்கு 832 புலமைப்பரிசில்களும் வழங்கப்படும் என்றும் — வர்த்தக, வாணிப உணவுத்துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இம்முறை மிகக் கூடுதல் எண்ணிக்கையான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## உதயன்

### ஆளுநரின் எச்சரிக்கை

★ வடக்கு - கிழக்கில் சட்டரீதியான சிவில் நிர்வாகம் அல்லது அரசியல் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

★ அந்த இரு பகுதிகளிலும் நடைபெறும் யுத்தம் முதலில் நிறுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே அபிவிருத்திப் பணிகளுக்கான அத்திவாரம் இடப்பட வேண்டும்,

★ கொழும்பில் இருந்து கொண்டு மாகாணங்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு தொடருமாயின் அதிகாரப் பரவலைக் கொண்டு வருவதில் அர்த்தமில்லை.

★ ஒருகையால் அதிகாரப் பரவல் என்று கொடுத்து மறுகையால் கொழும்பிலிருந்து மூக்கணாங் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருக்கும் நிலை மாறாவிடில் — 'றிமோட் கொன்ட்ரோல்' நிர்வாக முறை தொடர்ந்தால் — அதிகாரப்பரவல் தோல்வியிலேயே முடியும்.

★ மாகாண சபைகளின் ஆளுநர்களின் கடமைகள் பொறுப்புக்களை அரசமைப்புத் தெளிவாக வரையறுத்துக் கூறவில்லை.

இவ்வாறு சில முக்கியமான உண்மைகளை வெளியிட்டிருக்கின்றார் ஆளுநர் காமினி பொன்சேகா.

திரு. காமினி பொன்சேகா சுமார் ஒன்றரை வருடங்களாக வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநராக இருந்த அனுபவத்தின் பேரில் — தமக்குக் கிடைத்த பட்டறிவின் பேரில் — இந்த உண்மைகளையும் மற்றும் பல யதார்த்தங்களையும் வெளிப்படுத்தி உள்ளார் எனலாம்.

மாகாண சபைகள் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட போது, அவை தமிழ் மக்களுக்கு ஓரளவு சுயாட்சியையேனும் தரவல்லது என்ற கருத்தே தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது அப்படியல்ல, அதிகார நாணயக்கயிறு கொழும்பு அரசிடமே உண்டு என்றும் தமிழர்கள் தமது சொந்த அலுவல்களைத் தாமே செய்யவும், நிர்வகிக்கவும் போதிய சுயாட்சி அதிகாரம் (தாராளமாக) வழங்கப்படவில்லை என்ற எதிர்க்கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

காமினி பொன்சேகா போலவே, தென் மாகாணத்தில் முதலமைச்சராக இருந்த காலத்தில் சந்திரிகா குமாரதுங்காவும் மாகாண சபைகளின் அதிகாரங்கள் பல வழிகளாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்ற உண்மையை அப்போது வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

மொத்தத்தில் மாகாண சபை முறை தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைக் கணிசமான அளவில் தானும் நிறைவேற்றவில்லை என்ற வாதம் செயலளவில் சரியாகி வருவதைக் காண முடிந்தது; காண முடிகின்றது. அதாவது அனுபவம் உண்மையைப்பேசுவதால் சிங்கள அரசியல் தலைவர்களின் வாயாலேயே அது வெளி வந்து கொண்டிருக்கிறது,

இந்த அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டேனும், தமிழர்களுக்கும் பூரண சுயாட்சி அதிகாரம் தரவல்ல திட்டமே அவர்களுக்கு வழங்கப்படும் ஆகக் குறைந்த தீர்வாக இருக்க முடியும் என்பதனை அரசாங்கமும் சிங்கள அரசியல் தலைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதனை உணர்வார்களா? உத்தேச அரசியல் தீர்வுத் திட்டத்தை அந்த உணர்வை உள்ளடக்கியதாக வகுக்க முன் வருவார்களா?

## சமய சந்நிதிகளில்

புலோலி தெற்கு அருள்மிகு ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய மணவாளக் கோலவிழா எதிர்வரும் திங்கட்கிழமை 20 ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது. பகல் நிகழ்ச்சியாக சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (அ)

★ ★ ★

மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை (20 ஆம் திகதி) நடைபெறவுள்ளது. அன்று காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலி அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்படும். அதன் பின்னர் திருச்சொரூப பவனி இடம் பெறும். (அ)

★ ★ ★

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளிக்கிழமைதோறும் நடத்திவரும் சமய நிகழ்வுகளில் —

இன்று மு.ப. 10.30 மணிக்கு 'சந்நிதி முருகன்' என்னும் பொருளில் வ.ஆ. தங்கமயில் உரையாற்றுவார். (அ-173)

## பிரிட்டிஷ் அதிகாரி வருகிறார்

கொழும்பு, ஜன. 17

இலங்கை நிர்வாக சேவையை மறு சீரமைக்கும் திட்டத்தின் அம்சங்களை இனங்காண பிரிட்டிஷ் அமைச்சரவை அலுவலகத்தின் உயர் அதிகாரியான கிளிவ் பெரி இவ்வாரம் இலங்கை வருகிறார்.

பிரிட்டிஷ் நிபுணத்துவம் மற்றும் உதவியுடன் இலங்கை நிர்வாக சேவையை மறுசீரமைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

நிதிதிட்டமிடல் அமைச்சு மற்றும் மாகாண கூட்டுறவுச் சபைகள், சுதேசவைத்தியம் உட்பட பல அமைச்சு அதிகாரிகளையும் இவர் சந்திப்பார். (இ-3)

## விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

சண்டிலிப்பாய், ஜன. 17

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நலன்கருதி ரொபின் (20.Hp) ரகநீர் இறைக்கும் இயந்திரங்களை கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவந்து கொழும்பு விலைக்கே விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு யாழ். கமலநல சேவை திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நீர் இறைக்கும் இயந்திரங்களை பெற விரும்பும் விவசாயிகள் தத்தமது பிரிவிலுள்ள கமநலச்சேவை கேந்திர நிலையங்களில் முற்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார். (இ.135)

# இன்புற்று வாழ இன்சொல் பேசுக!

எந்த ஒரு ஜீவராசிக்கும் கொடுக்காத தனிச் சிறப்பை இறைவன் மானிடருக்கு வழங்கினான்; அதுதான் பேசும் இயல்பு. இப்பேசும் இயல்பு பெற்றவனான மனிதன் இறைவனுக்கு எந்நாளும் நல்வார்த்தைகளால் நன்றி சொல்லி வணங்கக் கடமைப் பட்டவன். வாழ்நாள் முழுவதும் இனிய நல்வார்த்தைகளைச் சொல்லி இறைவனை வணங்குவதோடு இனிய சொற்களைப் பயன்படுத்தியே எவரோடும் உரையாட வேண்டியது மானிட அறமாகும்.

இன்சொல் பேசும் மனிதரிடத்திலேயே இறைவன் வீற்றிருப்பான். இன்சொல் பேசுபவர்களால் வீட்டுக்கும் நாட்டுக்கும் துன்பமில்லை. வன்சொல் பேசுவதனால் எந்நாளும் துன்பங்களை எதிர் கொள்ள நேரிடும். வன்சொல் பேசுவதை வழக்கப்படுத்திக் கொள்வோமானால், வாழ்வில் எந்நாளும் எதிரிகளை வளர்த்துக் கொள்பவராவோம். வன்சொல்லின் வலிமை நிலையற்றது. இன்சொல்லின் இளமை எந்நாளும் நீடிக்கும் இயல்புடையது.

எனவேதான் ஆன்மீகப் பெரியவர்கள், அனுபூதிமான்கள் இறைவனை இன்சொல்லால் இனிது வாழ்த்திப் பாடியதோடு தம்மை நாடி வரும் அன்பர்களுக்கும் அருளுரைகள் வழங்கும் போதெல்லாம் இனிய சொற்களைக் கூறி இன்புறச் செய்தனர். இன்றைய உலகில் இன்சொல் பேசும் மனிதருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால்தான் உலகம் முழுவதும் அமைதியின்மை அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இறைவன் தந்த நன்கொடையாகிய வார்த்தைகள் பேசும் இயல்பை மனிதன் காக்க வேண்டும்.

**வன்சொல் பேசார்**

எமது மூதாதையர்கள் இன்சொல் பேசுவதே இந்துக்களின் உயர் பண்பாகப் பெரிதும் காத்தனர். சகுனப்பிழையான சொற்களை தவிர்த்தல் வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினர். உதாரணமாக மூதேவி, சனியன் என்ற வார்த்தைகளைச் சொல்ல அஞ்சினர். ஒருவனது இறப்பைத் தெரிவிக்கக்கூட நல்ல சொல் பயன்படுத்த வேண்டும் என்று மோட்சம் போய்விட்டார் என்ற சொல்லைப் பயன்படுத்தினர். ஏன் எனில் மங்கலத்துக்கு இடையூறான சொற்களை நாவால் உச்சரிக்கக்கூடக் கூசினர். ஆனால் இன்று இன்சொல் கவனித்துப் பேசுபவர் அருகுவது துன்பமே. இதனால் துன்பம் எம்மைச் சூழ்கிறது.

உண்மையாள ஆன்மீக வாழ்வை நாம் மேற்கொள்ள ஆன்றோர் காட்டிய வழிகளைப் பின்பற்ற வேண்டும். ஆத்தி சூடியில், ''ஞயம் பட வுரை'' (பேசும் சொல்லிலே இன்பம் விளையும்படி உரை) என சொல்லி வைத்தார்கள். திருமூலர் சுவாமிகள் திருமந்திரத்தில் சொன்ன அற ஒழுங்கில் இன்சொல்லுக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

''யாவர்க்குமாம் இறைவற் கொருபச்சிலை;
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை;
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி;
யாவர்க்குமாம் பிறர்க்கின் னுரை தானே''

என்று குறிப்பிடுகின்றார். எனவே இன்சொல் பேசுதல் இனிய அறம் என்பதை நாம் உணர வேண்டும்

நாம் அன்றாடம் பலரோடு உரையாடுகிறோம். காலையிலேயே எழுந்து மாலை உறங்கும்வரை நாம் நாக்கை உண்பதற்கும் உரைப்பதற்குல் ஓயாமல் பயன் படுத்துகிறோம். ஒவ்வாத உணவை நாக்கு ஏற்றால் பின் உபத்திரவப்படுகின்றோம். அதுபோல ஒவ்வாத சொல்லை நாவால் உச்சரித்து விட்டால் பின் துன்பப்படுகின்றோம்.

இடரினால் இன்று பலர் துன்புறும்போது பெரிய ஆறுதல் இன் சொல் பேசுதல் ஆகும். எனவே நாம் வாழும் வீட்டிலும் கடமையாற்றும் சூழலிலும் எம்மோடு உரையாடுபவரிடத்திலும் இடைவிடாத இறை பிரார்த்தனையிலும் இன்சொல்லைப் பேண முனைய வேண்டும்.

இன்சொல் பேசுவதால் இப்பிறவியில் மட்டுமல்ல மறுமைக்கும் இன்பம் உண்டு என வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டுள்ளார்,

சிறுமையுள் நீங்கிய இன்
சொல் மறுமையும்
இம்மையும் இன்பம்
தரும்''

எனவே இன்சொல் பேசி இன்புற்று வாழவேமாக.

— ஆறு. திருமுருகன்

### ஞானக்கதிர்

### நாளை

**தை 5**

**சனிக்கிழமை**

**திதி:** தசமி பிற்பகல் 4. 58வரை.

**நட்சத்திரம்:** கார்த்திகை பின் இரவு 2.53 வரை.

**ராகுகாலம்:** 9.35-11.05

**சுபநேரம்:** 3.35-5.05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏப்ரல் 14 க்கு முன்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் சென்ற ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி கோரப்பட்டன.

ஆனால் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் இந்த நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளரும், விவசாய காணி வனவள அமைச்சருமான டி. எம். ஐயரத்தின தகவல் வெளியிடுகையில், இந்தத் தேர்தல்களை பின் போட்டு வருவதாக அரசாங்கம் மீது குற்றஞ் சாட்டப்படுகிறது. ஆனால் அரசாங்கத்தின் மீது பிழையில்லை. தேர்தலை நடத்துவதற்கான சூழல் இல்லாததால் பின் போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று தெரிவித்தார்.

(இ-3)

# 45 நாள்கள் கடந்தும் பதிவழியா நினைவுகள்



| | |
|---|---|
| மலர்வு: | உதிர்வு: |
| 16 | 04 |
| — | — |
| 07 | 12 |
| — | — |
| 1937 | 1996 |

## அமரர் பொன். நாகமணி

(வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்)

சேற்றிலே செந்தாமரை செம்மையாய் வளர்ந்தது
வாசனை அதனை வளமாய் வீசியே நின்றது
சேற்றிலே வளர்ந்ததால் சேய்மையில் சேருமா?
வாய்மையை வாழ்விலே வளர்த்திட்டு நின்றது
பூத்தது புதியதாய் புண்ணியம் பெருகவே
விதைத்தது வித்தைத் துளிகளைத் தேடி
மட்டுவில் தலத்திலே தளர்வின்றி வளர்ந்தது
நாகமணி என்றே நாமம் சூடியே
புகழொடு தோன்றியே புகழொடு மறைந்தது
வளர்மதியதனை வளர்த்திட்டு நின்றது
வாஞ்சையுடனே வளம்பல கண்டது
கல்விக் கனிதனைக் கற்றில்லாக் காவியன்
சொல்லிக் கொள்ளாமல் சொர்க்கம் சேர்ந்ததை
சொந்தங்கள் கூடியே கண்ணீர் உகுத்தது
பந்தங்கள் நாமும் பாதம் வணங்கியே
சாந்தியை அடைய சாற்றினோம் பல மொழி.

45 நாட்கள் சென்றாலும் அன்னாரின் நினைவுகள் எம்மை விட்டு அகல மறுப்பதால் இந்நாளில் ஒரு தரம் நினைத்திட்டோம், சாந்தியை அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**வளர்மதி சனசமூக நிலையம்.**

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
17-01-1997 (9177)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| | |
|---|---|
| தோற்றம்: | மறைவு: |
| 10 | 18 |
| — | — |
| 02 | 12 |
| — | — |
| 1935 | 1996 |

அமரர்

## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை சிவஞானம்

(முன்னாள் அரசமரக் கூட்டுத்தாபன ஒப்பந்தகாரர்)

பெற்று வளர்த்து புத்தியினையூட்டிக் கற்பித்து,
நாங்கள் கரைசேருமுன்னே பற்றுவிட்டு,
மாதம் ஒன்றாகிப் போன
பொற்பாதங்கள் எங்கே காண்போம்?

நீங்கா நினைவுகளுடன் வாழும்;

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரன்.**

171A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [44703]

## கள்ள நோட்டு: இலங்கைக் குழு இந்தியாவுக்கு

ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் இந்தியாவில் அச்சிடப்பட்டு எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளதையடுத்து இலங்கை அதிகாரிகள் குழு ஒன்று இந்தியா செல்லவிருக்கின்றது.

இந்தக் கள்ள நோட்டு விவகாரம் தொடர்பாக வவுனியாவில் கைதான இருவர் விசாரிக்கப்பட்டதில் இந்தக் கள்ள நோட்டுகள் சென்னையில் அச்சிடப்பட்டது தெரிய வந்திருப்பதாக இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி கிடைத்தவுடன் ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பும் தனது பணியை ஆரம்பிக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

## விமான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் பட்டியல் இலக்கங்கள் வெவ்வேறாக சிவில் நிர்வாக அலுவலக அறிவித்தல் பலகையிலும் —

ஏனைய தொடர்பு சாதனங்களான உதயன் பத்திரிகை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். சேவை ஆகியவற்றிலும் —

விண்ணப்பதாரிகளை அனுமதிக்கும் சிவில் நலன் பதிவாளர் காரியாலயங்களிலும் —

பயணம் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்பித்த அலுவலங்களிலும் — வெளியிடப்படும்.

அனுமதி பெற்ற விண்ணப்பதாரிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட மூன்று திகதிகளில் ஏதாவது ஒரு திகதியில் பயணம் செய்ய முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாது விடுபவர்கள் அதன் பின் பயணம் செய்வதாயின் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.

இப்படி சிவில் நிர்வாக அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது. (இ-5)

## குடாநாட்டுக்குப்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துள்ளார் என்றும் —

இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த சமயம் தனிநபர்களாகவும், சிறு குழுக்களாகவும் இயங்கியது போன்ற அணிகளை அவர் அனுப்பியுள்ளார் என்றும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-150)

## கடற்படையின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெளியிட்ட தகவலில்:

பூநகரி, கல்முனைக்கும் மண்டைதீவுக்கும் இடையில் நேற்று முன்தினம் கடற் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று கடற்படையினர் கொல்லப்பட்டனர். கடற்படையினர் வந்த கடற்படைப் படகு ஒன்றும், ஆயுதங்களும், கொல்லப்பட்ட கடற்படையினரின் சடலங்களும் கடற் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது.

சம்பவத்தின் போது இரு கடற்படைப் படகுகள் கடற்படையினரையும் இராணுவத்தினரையும் ஏற்றிக் கொண்டு வந்தன என்றும் —

இவற்றில் ஒரு படகே தாக்குதலுக்கு உள்ளானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கடற்படை ரோந்துப் படகின் நீளம் 21 அடி என்றும் —

40 குதிரைச்சக்தி கொண்ட இயந்திரம் எல். எம். ஜி. உட்பட சில ஆயுதங்கள் வானொலித் தொடர்பு சாதனம் ஆகியவை கடற் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அதில் தெரிவிக்கப்பட்டது. (இ-3-5)

# பெரும்பான்மை மக்கள் அதிக குழந்தைகளைப் பெற வேண்டும்

## தேரர் ஒருவர் கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 17

படைகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் அதிகளவில் சேர்வதால் தாய்மார் அதிக எண்ணிக்கையான பிள்ளைகளைப்பெறவேண்டும். இதற்காக அவர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களுக்கு பரிசில்களும் வழங்க வேண்டும்.

இவ்வாறு கதிர்காமம் சூரான் கோட்டை விகாரை அதிபதி ருஹுணுமாகம்பற்று பிரதான சங்க நாயக்கர் அழுத்வெவ சோரத்த தேரர் தெரிவித்தார்.

பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களின் குழந்தைகளின் பிறப்பு வீதம் அருகி விட்டால் பௌத்த பிக்குகள் எவ்வாறு தோன்றுவர்? பௌத்த பிக்குகள் இல்லாது போனால் பௌத்த சாசனத்தை யார் காப்பாற்றுவார்கள்? எனவே பெரும்பான்மை இனத்தவர்கள் கூடியவரை அதிக குழந்தைகளைப் பெற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-5)

## புலிகள் பேச்சில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லப்படும் பல கூற்றுக்களில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளதை உணர முடிகிறது. இதனை அவர்கள் அடைந்து கொள்வார்களா இல்லையா என்பதையும் என்னால் கூற முடியாது.

அவர்களின் போக்கில் வெளிப்படையான எந்த மாற்றத்தையும் அவதானிக்க முடியவில்லை.

அவர்கள் அர்த்த பூர்வமான கருத்துக்களை வெளியிட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்வது அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் பற்றி ஆலோசனை நடத்துவது, சமஷ்டி அரசு அல்லது வேறு வழிமுறைகள் பற்றி கருத்து வெளியிடுவது வரவேற்கத்தக்கதும், பிரயோசனம்மிக்கதுமாக அமையும்.

அவர்கள் இத்தகைய கருத்துக்களை வெளியிடப் போகிறார்களா அல்லது ஒருபுறத்தில் கொடுமையான யுத்தத்தைப் புரிந்து கொண்டு மறுபுறத்தில் இந்த நடவடிக்கைகள் பற்றிப் பேசப்போகிறார்களா?

இலங்கையின் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொள்வது பற்றியும், அது தொடர்பான விடயங்கள் குறித்தும் விடுதலைப் புலிகள் கருத்துக்களை வெளியிடுவார்களேயானால் அது பெரிதும் பயன் உள்ளதாகவும், வரவேற்கத்தக்கதாகவும் அமையும். — என்று அமைச்சர் சொன்னார்.

(அ-3)

## மரணம்

சுற்றிவளைப்பின் போது பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞர் நுரைக்கிய நிலையில் மரணமானார்.

மன்னாரில் இச் சம்பவம் இடம் பெற்றது.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட மன்னார் பதில் மாவட்ட வைத்திய அதிகாரி இறந்தவரின் குடலில் ஒரு பகுதியை அரச பகுப்பாய்வு பகுதிக்கு அனுப்ப உத்தரவிட்டதுடன் பகுப்பாய்வு அறிக்கை வரும் வரை தீர்ப்பை ஒத்தி வைத்தார்.

மரணமானவர் நீலன்கரன் (வயது 25) என அப்பகுதியைச் சேர்ந்த சரவணமுத்து வினாசித்தம்பி என்பவர் அடையாளம் காட்டினார்.

## கிட்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது தரப்பில் எவ்வித இழப்புமில்லை. பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

ஏ. கே. எல். எம். ஜி. —1, ரி.56 — 2, ரி. 56 — பட்மொடல் — 1, 60 எம். எம். ஷெல் — 9, ஹிட் பாக் — 3, சப்பாத்து—1 சோடி, மொபயில் செற் — 1, குண்டுகள் — 6, நடுத்தர ரவைகள் — 1500, ஏ.கே. மகஸீன் — 6, சிவில் தொப்பி — 3, இராணுவப்பெல்ட் —3.

மார்பு ஹோல்ஸர் — 1, ஜெக்கட் றோல்ஸர் —1, பிளாட்டினம் ஜெக்கட் — 5, ஹெல்மெற் — 1, றம் மகசீன் — 1.


இப்போது வெளிவந்து விற்பனையாகின்றது!

# நாமும் சுற்றாடலும் ஆண்டு 3

**1995** ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக பட விளக்கங்களுடனும் செயற்பாடுகளுடனும் தயாரிக்கப்பட்டது.

**1997-ஆம் ஆண்டின் புதிய பதிப்பு** [விலை ரூபா 60.00]

வெளியீடு:

**ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை**

**235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

(44729)



# பொதுக்கூட்ட முன் அறிவித்தல்

அன்புடையீர்!

**இடம்:** யாழ். கொட்டடி நமசிவாய மகாவித்தியாலயம்
**காலம்:** 15-02-1997 முற்பகல் 10-00 மணிக்கு

யாப்பின் விதிகளுக்கமைவாக எமது ஆண்டுப் பொதுசபைக் கூட்டத்திற்கான முன் அறிவித்தல் விடுகின்றோம். நிகழ்ச்சிநிரல் தனித்தனியே அனுப்பி வைக்கப்படும்.

**செயலாளர்,**
**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**

(44726)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-01-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org